# பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு ஒப்பீடு (பாகம்-4)

பழைய ஏற்பாட்டு ஜெபம் மற்றும் புதிய ஏற்பாட்டு ஜெபம்

பழைய ஏற்பாட்டு ஜெபத்தை நாம் பின்பற்றுகிறோம், புதிய ஏற்பாட்டு ஜெபத்தை நாம் பின்பற்றுகிறோம். ஆனால் பழைய ஏற்பாட்டு ஜெபத்தை விட புதிய ஏற்பாட்டு ஜெபம் மிகவும் விசேஷித்தது என்பதை நாம் புரிந்து கொள்வதற்கு பழைய உடன்படிக்கையையும் புதிய உடன்படிக்கையும் நாம் அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

பழைய உடன்படிக்கை – தேவன் யூதர்களோடும், குறிப்பிட்ட சில மனிதர்களோடும் ஏற்படுத்திய உடன்படிக்கை ஆகும்.

புதிய உடன்படிக்கை – தேவனுக்கும் மனுக்குலத்திற்கும் இடையே இயேசு கிறிஸ்துவை மத்தியஸ்தராக கொண்டு செய்யப்பட்டது.

இயேசு கிறிஸ்துவை மத்தியஸ்தராக கொண்டு தேவன் மனுகுலத்தோடு செய்த புதிய உடன்படிக்கையானது தேவனோடு ஒரு உன்னதமான உறவை மனுக்குலத்திற்கு ஏற்படுத்திக் கொடுக்கக்கூடியதாய் இருக்கின்றது. இந்த புதிய உடன்படிக்கையானது, யூதருக்கும், புறஜாதியாருக்கும் மட்டுமல்லாது இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் உரியதாகும்.

பழைய உடன்படிக்கை மனிதனால் நிறைவேற்றப்படுவதை மனிதனால் நிலைநிறுத்தப் படுவதை பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் வாக்குத்தத்தங்களை உரிமை கோரி கேட்கிறதில் மாத்திரமல்லாமல் உடன்படிக்கையில் நிலைத்திருக்கும் போது மட்டுமே ஆசீர்வாதம் கிடைக்கிறதை காண்கிறதிலிருந்து அறிய முடிகிறது. ஆனால் புதியஉடன்படிக்கையில் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வதினால் புதிய உடன்படிக்கை இயேசு கிறிஸ்துவால் நிறைவேற்றப்படுகிறதையும் நிலைநிறுத்தப்படுகிறதையும் காண்கிறோம்

பழைய ஏற்பாட்டு ஜெபம் என்பது, தேவன் ஜெபத்திற்கு என்ன பதில் தரப்போகிறார் என்று இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருப்பதைக் குறிக்கின்றது. ஆனால் புதிய ஏற்பாட்டு ஜெபம், இயேசு கிறிஸ்து ஏற்கனவே செய்து முடித்தவைகளை நம்பி விசுவாசித்து அவைகளுக்காக நன்றி கூறி சுதந்தரிப்பதாகும்

பழைய ஏற்பாட்டில் ஆசீர்வாதங்களும் சாபங்களுக்கும் ஆமென் சொல்ல வேண்டும். ஆனால் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து நமக்காக சாபமாகி நியாயப்பிரமாணத்தின் சாபங்களுக்கும் நம்மை நீங்கலாக்கினதினாலே வாக்குத்தத்தங்களும் ஆசீர்வாதங்களும் ஆம் என்றும் ஆமென் என்றும் இருக்கின்றது. புதிய ஏற்பாட்டு ஜெபத்தில், நமது பலவீனங்களில் நமக்காக நம்முடைய ஆவியோடு இணைந்து வாக்குக்கடங்காத பெருமூச்சோடு ஜெபிக்கின்ற ஆவியானவரின் உதவியைப் பார்க்கின்றோம் ஆனால் பழைய ஏற்பாட்டில் இப்படிப்பட்டதான அனுபவம் இல்லை.

இயேசுகிறிஸ்துவும் நமக்காக ஜெபிக்கின்றார். (எபிரெயர் 7:25) நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகின்றார். (1 யோவான் 2:1) ஜெபத்தின் மூலம் நாம் பரம கிருபாசனத்தன்டை வருவதற்கு நமக்கு தைரியமும் பாக்கியமும் கிடைத்திருக்கிறது.

நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவதினால் கிறிஸ்துவுடனே கூட சுதந்தரவாளிகளாக இருக்கின்றோம். ஆனால் பழைய ஏற்பாட்டில் இந்த பாக்கியமும் இல்லை. இருதயத்திற்கு ஏற்றவன், நண்பன் என்று பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் அழைக்கப்பட்டிருந்தாலும் நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவது மேன்மையான ஆசீர்வாதமாகும்.

- பழைய உடன்படிக்கை சிலுவைக்கு முந்தினது புதிய உடன்படிக்கை சிலுவைக்கு பிந்தினது.

சிலுவைக்கு முந்தி (பழைய ஏற்பாட்டில்) மனிதனுடைய கிரியைகள் அவசியமானதாய் காணப்பட்டது, தேவனுடைய ஆசீர்வாதத்தை பெறுவதற்கு ஆனால் சிலுவைக்கு பின்பு (புதிய ஏற்பாட்டில்) விசுவாசம் அவசியமானதாய் காணப்படுகிறது. காரணம் கிரியைகளினால் அல்ல, இயேசு கிறிஸ்து நமக்காக பாவமானார், நமக்காக நீதியானார், அவருடைய நீதியினால் நாம் நீதிமான்களாக்கப் படுகிறோம் என்பதினால்.

பழைய ஏற்பாட்டு ஜெபம் சத்துருவை அதாவது எதிராளியை அழித்து போடும்படி ஜெபிக்கின்ற ஜெபமாக இருக்கின்றது. ஆனால் புதிய ஏற்பாட்டு ஜெபமோ சத்துருவையும் நேசிக்கின்ற மற்றும் மன்னிப்பு கேட்கின்ற ஜெபமாக காணப்படுகிறது.

பழைய ஏற்பாட்டு ஜெபம் சுயநலம் உடையதாக இருக்கின்றது. தனக்காக, தன் ராஜ்யத்துக்காக அநேக நேரங்களில் ஜெபிக்கின்றதை நாம் காண்கின்றோம். ஆனால் புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்து எல்லா மனிதர்களுக்காகவும் ஜெபிக்க அறிவுறுத்துகின்றார்.

எங்களுக்கு ஜெபிக்க கற்றுத்தாரும் என்று சீஷர்கள் இயேசு கிறிஸ்துவிடம் கேட்ட பொழுது, அவர் எந்தவொரு பழைய ஏற்பாட்டு ஜெபத்தையும் மேற்கோள் காட்டவில்லை. ஏனென்றால் புதிய ஏற்பாட்டில் தான் ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட ஜெபத்தை கிறிஸ்துவானவர் கொண்டு வருகிறார். இயேசு கிறிஸ்து சீஷர்களுக்கு கற்றுக்கொடுத்த ஜெபத்தில் காணப்பட்டவைகள்

ஆதியாகமம் 18:22,23 ஆகிய வசனங்களில் ஆபிரகாம் ஏறெடுக்கிற இரட்சிப்பிற்கான மன்றாட்டு ஜெபமானது. தனி ஒரு நபரை உள்ளடக்கியதாக இருக்கின்றது. ஆனால் கிறிஸ்துவானவர் சர்வலோகத்தின் பாவங்களை சுமந்து எல்லோருக்கவும் மரித்ததினால் ஒவ்வொருவரையும் கருத்தில் கொண்டு மன்றாடுகிறவராக

காணப்படுகிறார். நமக்கும் இப்படிப்பட்ட ஜெபத்தைக் கற்றுக்கொடுக்கிறவராக இருக்கிறார்.

எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களானார்கள். நீதிமான் இல்லை ஒருவனாகிலும் இல்லை என்று வாசிக்கிறதிலிருந்து, பழைய ஏற்பாடு எதிர்பார்க்கிற நீதிமான் என்கிற அளவுகோல் வேற, புதிய ஏற்பாடு எதிர்ப்பார்க்கிற நீதிமான் என்கிற அளவுகோல் வேறே என்கிறதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

ஆனால் புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்து தம்முடைய சொந்த இரத்தத்தினாலே நித்திய மீட்பை உண்டுபண்ணி, ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு நம்முடைய மனசாட்சியைச் செத்த கிரியைகளைச் சுத்திகரித்திருக்கிறார் என்று எபிரெயர் 9:12,14 ஆகிய வசனங்களில் வாசிக்கின்றோம்.

புதிய ஏற்பாட்டில் - நம்முடைய சரீரம் தேவனாலே பெற்றதும் நம்மில் தங்கியுமிருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருப்பதினால், ஆவியானவர் நம்முடைய ஆவிவுடனே இணைந்து ஜெபிக்கிற அனுபவம் நம்மில் உண்டாயிருப்பதினால் ஜெப வாழ்க்கை மேன்மை நிறைந்ததாக இருக்கிறது. பழைய ஏற்பாட்டில் இப்படிப்பட்டதான அனுபவம் இல்லை.

தேவன் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை, பரிசுத்தவான்களிடத்தில் தேவனுக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம், விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்தில் தேவன் காண்பிக்கிற வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் ஆகிய இவைகளையெல்லாம் நாம் அறியும்படிக்கு தேவன் நமக்கு பிரகாசமுள்ள மனக்கண்களையும், ஞானத்தையும், தெளிவையும் அளிக்கிற ஆவியை தந்தருள வேண்டுமென்று, இப்படி ஆவிக்குரிய காரியங்களை வாஞ்சித்து விரும்பி தேவனிடம் வேண்டிகொள்கிற இந்த புதியஏற்பாட்டின் ஜெபம், பழைய ஏற்பாட்டின் ஜெபங்களை விட மிகவும் மேன்மையானதாகும். ஏனென்றால் பழைய ஏற்பாட்டில் பாதுகாப்பு, சுகம். வெற்றி என்று தனக்காக தன் ராஜ்யத்துக்காக ஏறெடுக்கப்படுகிற ஜெபங்களே அநேகமாக காணப்படுகிறது.

பழைய ஏற்பாட்டு நீதி அவர்களுடைய கிரியைகளின் அடிப்படையிலானது. ஆனால் புதிய ஏற்பாட்டின் நீதியோ, இயேசுகிறிஸ்துவின் நீதியின்மேல் நாம் வைக்கின்ற விசுவாசத்தின் அடிப்படையிலானது.

1 யோவான் 2:2 நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே. நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாக இயேசுகிறிஸ்து இருக்கின்றார்.

பழைய ஏற்பாட்டு பலிகளும் காணிக்கைகளும் ஆராதனை செய்கிறவனுடைய மனசாட்சியை பூரணப்படுத்தக்கூடாதவைகளாய் இருக்கிறது என்றும், அவைகளை யெல்லாம் சரீரத்திற்கேற்ற சடங்குகளாய் இருக்கிறது என்றும் எபிரெயர் 9:9,10 வாசிக்கின்றோம்.

பழைய ஏற்பாட்டில் செலுத்தப்பட்ட காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தமும், தீட்டுப்பட்டவர்கள்மேல் தெளிக்கப்பட்ட கடாரியின் சாம்பலும் சரீர சுத்தியுண்டாகும்படி பரிசுத்தப்படுத்தக்கூடியதாக இருந்ததே தவிரே நித்திய மீட்பை உண்டாக்கவில்லை. (எபிரெயர் 12:12,13)

கேள்விகள்

1. பழைய உடன்படிக்கை மற்றும் புதிய உடன்படிக்கை இவைகளைப் பற்றி இப்பாடத்தின் மூலமாக கற்றுக்கொண்டவைகளை எழுதுக?
2. பழைய ஏற்பாட்டு ஜெபம் மற்றும் புதிய ஏற்பாட்டு ஜெபங்களின் தன்மைகளைப் பற்றிக் கூறுக?
3. புதிய ஏற்பாட்டு ஜெபம், பழைய ஏற்பாட்டு ஜெபத்தை விட விசேஷமானது என்பதை உறுதிபடுத்தும்படி இப்பாடத்தில் கற்றுக்கொண்டவைகளை வசன ஆதாரத்துடன் விளக்கமாக கூறுக?